**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.9/2025 அதன் அ.வ.எண்.132/2019**

லெட்சுமி ... மனுதாரர்/வாதி

–எதிர்–

பால்ராஜ் ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனு என்முன்பாக 25.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சிவசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராக உள்ள நிலையில், மனுதாரர் தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 – ன் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், பிராது 2 ம் தபசில் சொத்தைப் பொறுத்து செயல் உறுத்துக் கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் மனுதாரர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், மேலும் அசல் வழக்கானது வாதி தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், இந்நிலையில், மனுதாரர் தரப்பில் தபசில் சொத்து

அமைப்பைக் காட்டும் Satellite Image ஐ மனுதாரரின் மகன் கணினியில் பதிவிறக்கம் செய்துள்ளார் என்றும், மேற்படி ஆவணத்தை மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டியது அவசியம் என்றும், மேற்படி ஆவணமானது மனுதாரர் முன் வைத்துள்ள பிராது சங்கதிக்கு பக்க பலமாக அமையும் என்றும், மேற்படி ஆவணத்தை குறியீடு செய்யும் பொருட்டு வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என்று கூறி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) எதிர்மனுதாரரரை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினராக உள்ளார்.

4) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், இம்மனு அனுமதிப்பதற்கு உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

5) இந்த மனுவை பொறுத்தவரை மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியத்தையும் மற்றும் சான்றாவணத்தையும் முன்னிறுத்தவில்லை.

6) மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கின் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கானது 2ம் தபசில் சொத்தைப் பொறுத்து செயல் உறுத்துக் கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) அசல் வழக்கானது மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், மனுதாரரின் மகன் தபசில் சொத்தின் அமைப்பை காட்டும் Satellite Image ஐ கணினியில் பதிவிறக்கும் செய்துள்ளார் என்றும், மேற்படி ஆவணம் மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய

வேண்டியது அவசியம் என்றும், மேற்படி ஆவணத்தை குறியீடு செய்யும் பொருட்டு வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டுமென மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

8) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கானது தற்போது வாதி தரப்பில் கூடுதல் சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் தரப்பில் அவர் கூறும் ஆவணத்தை குறியீடு செய்தால் தான் இந்த வழக்கில் சரியாக தீர்வு காண்பதற்கு உதவும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணம் சம்மந்தமாக குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்டுக் கொள்ள வாய்ப்பு உள்ளது. எனவே, மனுதாரருக்கு அவரது தரப்பு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு வழங்கும் விதமாகவும், நீதியின் நலன் கருதியும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவினை அனுமதித்து உத்திரவிடலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர் மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வதற்காக மட்டும் தனது தரப்பு சாட்சியத்தை அழைக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

orders uploaded on 10.12.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.12.10 15:22:22 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
orders uploaded on 10.12.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.12.10 15:22:31 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.9/2025 இன்</u>**

**<u>அ.வ.எண்.132/2019</u>**

சீரான/ வரைவு – உத்தரவு

**<u>10.12.2025.</u>**